28.12.15

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தென் கடலோர மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு**

தமிழகத்தின் தென் கடலோர மாவட்டங்களில், திங்கள்கிழமை மழை பெய்யும் வாய்ப்புள்ளது என சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து மைய அதிகாரிகள் கூறியது: தென் கிழக்கு வங்கக் கடல், அதனை ஒட்டிய தெற்கு அந்தமான் கடல் பகுதியில் நிலை கொண்டிருந்த குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலையானது, ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் தென் வங்கக் கடலின் மத்தியப் பகுதியில் நிலை கொண்டுள்ளது.

இதனால், ஞாயிற்றுக்கிழமை காலை வரையிலான கடந்த 24 மணி நேரத்தில், தமிழகத்தில் எங்கும் மழை பதிவாகவில்லை. அடுத்த 24 மணி நேரத்தைப் பொருத்தவரை, தென் கடலோர மாவட்டங்கள், புதுச்சேரியிலும் ஒரு சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் வாய்ப்புள்ளது. சென்னையில் வானம் மேக மூட்டத்துடன் இருக்கும். ஒரு சில இடங்களில் மிதமான மழை பெய்யும் வாய்ப்புண்டு என்றனர்.

இரவில் குளிர்: வட கிழக்குப் பருவ மழை நிறைவுப் பெற இன்னும் ஓரிரு நாள்கள் உள்ள நிலையில், சென்னை, புறநகர் பகுதிகளில் 2 நாள்களாக குளிர் காற்றுடன் கூடிய கால நிலை நிலவுகிறது. மாலை 3 மணியளவில் இருந்து, குளிர்ந்த காற்று வீசுகிறது. அதிகாலை நேரங்களில் புகை மூட்டம் நிலவுகிறது.

**மேட்டூர் அணையிலிருந்து 9 ஆயிரம் கன அடி நீர் திறப்பு**

மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு நீர் திறப்பு நொடிக்கு 9 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு நொடிக்கு 7 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது. தற்போது, டெல்டா பாசனப் பகுதிகளில் நீருக்கானத் தேவை அதிகரித்துள்ளதால், சனிக்கிழமை மாலை 6 மணி முதல் பாசனத்துக்கு திறக்கப்படும் நீரின் அளவு நொடிக்கு 9 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை காலை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 95.54 அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 943 கன அடியாகக் குறைந்துள்ளது. அணையின் நீர் இருப்பு 59.21 டி.எம்.சி.

10 ஆயிரம் பனை விதைகள் 2,000 மரக்கன்றுகள் நடப்பட்டன.

அவிநாசி அருகே தண்டுக்காரம்பாளையத்தில் ஊர் பொதுமக்கள் சார்பில் 10 ஆயிரம் பனை விதைகள், 2 ஆயிரம் பனை மரக்கன்றுகள் நடும் விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

தண்டுக்காரம்பாளையம் அரசுப் பள்ளி மைதானத்தில் இதன் தொடக்க விழா நடைபெற்றது. ஊர் பொதுமக்கள் பெருந்திரளாக பங்கேற்று குளக்கரையில் 10 ஆயிரம் பனை விதைகளையும், 2 ஆயிரம் மரக்கன்றுகளையும் ஒரே நாளில் நட்டுனர்.

இதைத்தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில் மரம் மற்றும் இயற்கை வேளாண்மையின் அவசியம் குறித்து இயற்கை ஆர்வலர் பாமயன் பேசினார். ஓய்வு பெற்ற ஆசிரியர் கண்ணன், இந்திய ராணுவப் பாதுகாப்பு படையில் பணியாற்றும் குருசாமி, மாவட்ட வருவாய் அலுவலர் சாந்தி, வாகன ஆய்வாளர் ராஜு, பனை ஆர்வலர் தம்பி (எ) கருப்பசாமி, தண்டுக்காரன்பாளையம் காலனித் தலைவர் அவனாசி, மருத்துவக் கல்லூரி மாணவர் சஞ்சய், பள்ளி மாணவி மோகனப் பிரியா,

சுதேசி இயக்கப் பொறுப்பாளர் குமரி நம்பி, நல்ல உணவு அமைப்பு சிவக்குமார், பள்ளி மாணவர்கள், பொதுமக்கள் என ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

**நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

திருப்பூர் கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் செவ்வாய்க்கிழமை (டிசம்பர் 29) நடைபெறவுள்ளது.

திருப்பூர் கோட்டத்துக்கு உள்பட்ட திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, பல்லடம், ஊத்துக்குளி, அவிநாசி ஆகிய வட்டங்களில் உள்ள விவசாயிகளுக்கான குறைதீர்க்கும் கூட்டம் வரும் செவ்வாய்க்கிழமை காலை 11 மணியளவில் திருப்பூர் கோட்டாட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில், கோட்டாட்சியர் முருகேசன் தலைமையில் நடைபெற உள்ளது.

எனவே, விவசாயிகள் தங்கள் பிரச்னைகளை மனுக்கள் வாயிலாகத் தெரிவித்து, தீர்வுகாணலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பனிப்பொழிவு: மல்லிகைப் பூ விலை கிலோ ரூ. 1600**

பனிப்பொழிவு காரணமாக மல்லிகைப் பூ மகசூல் குறைந்துள்ளதால், அதன் விலை கிலோ ரூ. 1600 ஆக உயர்ந்துள்ளது.

சத்தியமங்கலம் வட்டாரத்தில் உள்ள 100-க்கும் மேற்பட்ட கிராமங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பில் மல்லி, முல்லை உள்ளிட்ட பல்வேறு ரகப் பூக்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. கோடைக்காலத்தில் ஏக்கர் ஒன்றுக்கு 200 கிலோ வரை மகசூல் கிடைத்த மல்லிகைப் பூ, தற்போது நிலவும் பனிப்பொழிவு காரணமாக ஏக்கர் ஒன்றுக்கு 1 கிலோ ஆக சரிந்துவிட்டது. தினந்தோறும் மொத்தம் 18 டன் மகசூல் கிடைத்த பூக்கள், தற்போது 150 கிலோ மட்டுமே உற்பத்தியாகிறது.

கடும் பனிப்பொழிவு காரணமாக பச்சைப் பூ தாக்குதல் போன்ற நோய் ஏற்படுவதால் பூ மகசூல் குறைந்துள்ளது. வரும் பிப்ரவரி மாதம் வரை பூக்கள் உற்பத்தி குறைவாக இருக்கும் எனக் கூறப்படுகிறது.

சத்தியில் விவசாயிகள் முன்னிலையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் மல்லிகைப் பூ கிலோ ரூ. 1600-க்கும், முல்லை கிலோ ரூ. 1200-க்கும், கனகாம்பரம் கிலோ ரூ. 600-க்கும் விற்பனையானது. கடந்த மாதங்களில் மல்லி, முல்லைப் பூக்களின் விலை அதிகபட்சமாக ரூ. 250-க்கு மட்டுமே விற்பனையானது.

கேரளத்தில் முகூர்த்த சீசன் என்பதால் கேரள வியாபாரிகள் அதிக அளவில் பூக்களை வாங்கிச் சென்றனர் என பூ மார்க்கெட் தலைவர் எஸ்.ஆர்.முத்துசாமி தெரிவித்தார்.

**ரூ. 61 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்**

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ. 61 லட்சத்துக்கு கொப்பரை ஏலம் சனிக்கிழமை நடைபெற்றது.

பெருந்துறை சுற்று வட்டாரப் பகுதி விவசாயிகள் 2,253 மூட்டைகளில் 1,10,000 கிலோ கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

இதில், முதல் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ. 58.50-க்கும், அதிகபட்சமாக ரூ. 63.15-க்கும் விற்பனையானது.

இரண்டாம் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ. 40-க்கும், அதிகபட்சமாக ரூ. 58.25-க்கும் விற்பனையானது. மொத்தம், ரூ. 61 லட்சத்துக்கு ஏலம் மூலமாக விற்பனையானது என சங்கத் தலைவர் அருள்ஜோதிகே.செல்வராஜ்தெரிவித்தார்.

**வெண்பட்டு வளர்ப்பு பயிற்சி முகாம்**

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டாரத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு "அட்மா' திட்டத்தின் கீழ், வெண்பட்டு வளர்ப்பு குறித்த பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது.

வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் கா. சரவணன் தொடக்கிவைத்துப் பேசினார்.

கிருஷ்ணகிரி ஆராய்ச்சி, விரிவாக்க மையத்தைச் சேர்ந்த பட்டு வளர்ச்சி வாரிய விஞ்ஞானி மாசிலாமணி, வெண்பட்டு வளர்ப்பில் புதிய தொழில்நுட்பங்கள், மல்பரி வயல் தேர்வு, மண் மாதிரி எடுத்தல், தோட்டம் பராமரிப்பு, உர நிர்வாகம், பூச்சி, நோய் பராமரிப்பு, புழு வளரப்பு குறித்து விரிவாகப் பேசினார்.

**கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ1.70 கோடி மஞ்சள் ஏலம்**

திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் 2 ஆயிரத்து 500 குவிண்டால் மஞ்சள் ரூ.1.70 கோடிக்கு ஏலம் போனது.

திருச்செங்கோடு - வேலூர் சாலையில், திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் மஞ்சள் ஏலம் வாரம்தோறும் சனிக்கிழமை நடைபெறுகிறது.

சனிக்கிழமை மஞ்சள் வரத்து குறைவாக இருந்ததால் வியாபாரிகளிடையே கடும் போட்டி நிலவியதால் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைத்தது.

இதில், விரலி ரகம் ஒரு குவிண்டால் ரூ. 8 ஆயிரத்து 699 முதல் ரூ.10 ஆயிரத்து 899 வரையிலும், கிழங்கு ரக மஞ்சள் ரூ. 8 ஆயிரத்து 9 முதல் ரூ. 9 ஆயிரத்து 689 வரையும், பனங்காலி ரகம், ரூ. 8ஆயிரத்து 19 முதல் ரூ. 18 ஆயிரத்து 719 வரையும் ஏலம் போனது. மொத்தம் விற்பனைக்கு

வந்த 2ஆயிரத்து 500 குவிண்டால் மஞ்சள் ரூ.1.70 கோடிக்கு ஏலம் போனதாக, விற்பனை நிலைய மேலாண் இயக்குநர் காந்திநாதன் தெரிவித்தார்.

**படுதா கட்ட கோழிப் பண்ணையாளர்களுக்கு அறிவுறுத்தல்**

பனியின் தாக்கம் அதிகமாக இருப்பதால் குளிரைக் கட்டுப்படுத்த உயர் மனைகளில் படுதா கட்ட வேண்டும் என, கோழிப் பண்ணையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி, ஆராய்ச்சி நிலையம் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

அடுத்த நான்கு நாள்களுக்கு வானம் லேசான மேகமூட்டத்துடனும், மழையற்றும் காணப்படும். வெப்ப அளவு குறைந்தும், பனியின் அளவு அதிகரித்தும் இருப்பதால், கோழிகளின் தீவன எடுப்பு உயரும். தீவனத்தில் எரிசக்தியின் அளவை உயர்த்துவதால் மட்டுமே தீவன எடுப்பைக் கட்டுப்படுத்த இயலாது. உயர் மனைகளில் பக்கவாட்டில் 3 அடி உயரத்துக்கு படுதாவைக் கட்ட வேண்டும். இது அதிக குளிர் கோழிகளின் மேல் நேரடியாகப் படுவதைத் தடுத்து அதிக தீவன எடுப்பைக் கட்டுப்படுத்த உதவும்.

கோழியின நோய் கண்காணிப்பு, கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் கடந்த வாரம் பரிசோதனை செய்யப்பட்ட இறந்த கோழிகளில் பெரும்பாலும் குடல்புண், இறக்கை அழுகல் நோயால் பாதிக்கப்பட்டு இறந்தது தெரிய வந்துள்ளது. எனவே, பண்ணையாளர்கள் கோழிகளுக்கு அளிக்கப்படும் தீவனத்தில் கிளாஸ்ட்டியம் கிருமியின் தாக்கம் உள்ளதா என, ஆய்வகத்தில் பரிசோதனை செய்ய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அரியலூரில் டிச. 30-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

அரியலூர் மாவட்ட ஆட்சியரக அலுவலக கூட்டரங்கில் வரும் 30 ஆம் தேதி முற்பகல் 11 மணிக்கு விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் விவசாயிகள், முன்னோடி விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் தங்கள் விவசாயம் சார்ந்த குறைகளை தெரிவிக்கலாம் என ஆட்சியர் எ.சரவணவேல்ராஜ் சனிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**பாசனப் பகுதிகளில் தேவை அதிகரிப்பு: அணைகளிலிருந்து கூடுதல் தண்ணீர் திறப்பு**

குமரி மாவட்டத்தில் பாசனப் பகுதிகளில் தண்ணீர் தேவை அதிகரித்துள்ள நிலையில் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி உள்ளிட்ட அணைகளிலிருந்து கூடுதல் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

குமரி மாவட்டத்தில் மழை ஓய்ந்த நிலையில் பாசனப் பகுதிகளில் தண்ணீர் தேவை அதிகரித்துள்ளது. இதையடுத்து பேச்சிப்பாறை அணையிலிருந்து விநாடிக்கு 400 கன அடி தண்ணீரும், பெருஞ்சாணி அணையிலிருந்து விநாடிக்கு 200 கன அடி தண்ணீரும், சிற்றாறு அணையிலிருந்து விநாடிக்கு 100 கன அடி தண்ணீருமாக மொத்தம் 700 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

அணைகளில் நீர்மட்டம்:பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் 46.22 அடியாகவும், பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 74.60 அடியாகவும், சிற்றாறு 1 அணையின் நீர்மட்டம் 16.60 அடியாகவும், சிற்றாறு 2 அணையின் நீர்மட்டம் 16.70 அடியாகவும், பொய்கை அணையின் நீர்மட்டம் 29.10 அடியாகவும், மாம்பழத்துறையாறு அணையின் நீர்மட்டம் 54.12 அடியாகவும் இருந்தது.

மீண்டும் மழை எச்சரிக்கை: மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக வெயில் கடுமையாக இருந்து வரும் நிலையில் மீண்டும் மழை பெய்யும் என வானிலை அறிக்கைகள் வந்துள்ள நிலையில் வெள்ள அபாய எச்சரிக்கை நீடித்து வருவதாக பொதுப்பணித்துறையினர் தெரிவித்தனர்.

**"திராட்சை விவசாயிகளின் பிரச்னைகளைத் தீர்க்க வேண்டும்'**

கர்நாடகத்தில் திராட்சை விவசாயிகளின் பிரச்னைகளைத் தீர்க்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, சிக்பள்ளாபூரு மாவட்ட திராட்சை விவசாயிகள் சங்கத் தலைவர் பி.என்.கிருஷ்ணப்பா வலியுறுத்தினார்.

இதுகுறித்து பெங்களூரில் வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

தேசிய அளவில் திராட்சையைப் பயிரிடும் விவசாயிகள் கர்நாடகத்தில் அதிக எண்ணிக்கையில் உள்ளனர். அவர்கள் பல்வேறு பிரச்னைகளைச் சந்தித்ததையடுத்து, திராட்சைகள் மூலம் ஒயின் தயாரிப்பதற்கு பலருக்கு அனுமதி வழங்கப்பட்டது.

இதனால் திராட்சை விவசாயிகளின் பிரச்னை குறைந்து வந்த நிலையில், பெங்களூரில் உள்ள மைசூரு சாலையில் உள்ள தனியார் ஒயின் நிறுவனம் திராட்சைகளுக்குப் பதிலாக ஒயினில் எரிசாயம் கலந்து விற்பனை செய்து வந்தது.

இதனால் அரசுக்கு ரூ. 22 கோடியும், திராட்சை விவசாயிகளுக்கு ரூ. 11 கோடியும் இழப்பு ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. நடவடிக்கை எடுக்க மாநில கலால் துறை அமைச்சர் உத்தரவிட்டுள்ள நிலையில், எரிசாரயத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட ஒயின் இன்னும் திரும்பப் பெறப்படவில்லை.

எனவே, அரசு இந்த விவகாரத்தில் உடனடியாக தலையிட்டு, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இதனால், விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள இழப்பை சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் பெற்று தர வேண்டும்.

மேலும், சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுபோன்ற நிறுவனங்களால் திராட்சை விவசாயிகள் தொடர்ந்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர் என்றார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மேட்டூர் அணை நீர்திறப்பு 9,000 கனஅடியாக உயர்வு**

மேட்டூர்: மேட்டூர் அணை டெல்டா நீர்திறப்பு வினாடிக்கு, 9,000 கனஅடியாக அதிகரிக்கப்பட்டது. மேட்டூர் அணையில் இருந்து, 23ம் தேதி முதல் வினாடிக்கு, 7,000 கனஅடி நீர், டெல்டா பாசனத்துக்கு திறக்கப்பட்டது. நேற்று, டெல்டா நீர்திறப்பு வினாடிக்கு, 9,000 கனஅடியாக அதிகரித்த நிலையில், நீர்மட்டம், 95.540 அடியாகவும், நீர் இருப்பு, 59.214 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. வினாடிக்கு, 943 கனஅடி நீர் வந்தது. நீர்வரத்து சரிந்ததால், கடந்த, நான்கு நாட்களில் நீர்மட்டம், 2 அடி சரிந்துள்ளது.

**நெல்லையில் மீண்டும் கனமழை**

நெல்லை : கடந்த சில நாட்களாக ஓய்ந்திருந்த வடகிழக்கு பருவமழை, மீண்டும் தீவிரமடைய துவங்கி உள்ளது. இதன் காரணமாக நெல்லை மாவட்டத்தில் நேற்று இரவு முதல் தொடர்ந்து கனமழை பெய்து

வருகிறது. அம்பாசமுத்திரம், கல்லிடைகுறிச்சி, தென்காசி ஆகிய பகுதிகளில் நல்ல மழை பெய்து வருகிறது.

**கிணறுகளில் அதிகரிக்கும் நீர்மட்டம்:வறட்சி இல்லா ஆண்டாக 2016**

ஸ்ரீவில்லிபுத்தூர்:தொடர் மழை காரணமாக ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதி கிணறுகள், வீடுகளின் போர்வெல்களில் நீர்மட்டம் அதிகரித்துள்ளதால், 2016 வறட்சி இல்லா ஆண்டாக இருக்கும் என்பதால் மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.கடந்த 2 வாரங்களுக்கு முன்பு மேற்கு தொடர்ச்சி மலையில் பெய்த மழையினால், செண்பகதோப்பு வனப்பகுதியில் அதிக நீர்வரத்து ஏற்பட்டு பேயனாற்று ஓடையில் வெள்ளபெருக்கு ஏற்பட்டது. இதனால் மம்சாபுரம் பகுதி கண்மாய்கள் நிறைந்து, ஸ்ரீவில்லிபுத்தூர் பெரியகுளம் உட்பட பல கண்மாய்கள் நிரம்பியது.

தற்போது பெரும்பாலான கண்மாய்களில் அதிக தண்ணீர் தேங்கியுள்ளது. இதையடுத்து விவசாய வேலைகளை விவசாயிகள் துவக்கி உள்ளனர்.பெரும்பாலான கண்மாய்களில் தண்ணீர் அதிகளவில் இருப்பதால் கிணறுகளில் நீர்மட்டம் அதிகரித்துள்ளது. ஒரு சில கிணறுகளில் கைக்கு எட்டும் தூரத்தில் நீர்மட்டம் காணப்படுகிறது. வீட்டு போர்வெல்களிலும் நீர்மட்டம் அதிகரித்துள்ளதால் மேல்நிலைதொட்டிகள் விரைவில் நிரம்பிவிடுகிறது. இதனால் தெருபொதுகுழாய்களில் தண்ணீர் பிடிப்பவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

தற்போதுள்ள நீரின் இருப்பால் 2016ம் ஆண்டு வறட்சி இல்லாத ஆண்டாக இருக்கும் என பொதுமக்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

**உருளைக்கிழங்கில் தரமான விதை விவசாயிகளுக்கு மூன்று நாள் பயிற்சி**

ஊட்டி: ஊட்டி முத்தோரையில் உள்ள மத்திய உருளைக் கிழங்கு ஆராய்ச்சி நிலையத்தின் சார்பில், உருளைக் கிழங்கில் தரமான விதை உற்பத்தி மற்றும் சேமிப்பு குறித்த மூன்று நாள் பயிற்சி வழங்கப்பட்டது.

ஆராய்ச்சி நிலைய தலைவர் டாக்டர் வெங்கடாசலம் வரவேற்று பேசுகையில்,"உருளைக் கிழங்கு சாகுபடியை பொறுத்தவரை, மாவட்டத்தில் தரமான விதைக் கிழங்கை பெறுவது, மிக பெரிய பிரச்னையாக உள்ளது. விதை சேமிப்பு குறித்த தொழில்நுட்ப விபரங்களை அறிந்து கொள்ளாததால், விவசாயிகள், விதைகளை சேமித்து வைப்பதில்லை. எனவே முறையான விதைக் கிழங்கு சேமிப்பு தொழில் நுட்பங்களை தெரிந்து கொள்ள வேண்டும்," என்றார்.

மாவட்ட தோட்டக்கலை இணை இயக்குனர் மணி தலைமை வகித்து, பயிற்சியை துவக்கி வத்தார். இந்திய மண் மற்றும் நீர் வள பாதுகாப்பு, ஆராய்ச்சி மைய தலைவர் கோலா சிறப்பு விருந்தினராக பங்கேற்று பேசினார். உருளைக் கிழங்கு ஆராய்ச்சி நிலையத்தால் தயாரிக்கப்பட்ட பயிற்சி விளக்க கையேடு வெளியிடப்பட்டது.

விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. பயிற்சியில், மேல் கவுஹட்டி, கெந்தொரை, மடித்தொரை மற்றும் குந்தசப்பை பகுதிளைச் சேர்ந்த விவசாயிகள் பங்கேற்றனர். ஏற்பாடுகளை ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் சுதா, ஆர்த்தி பைரவா, திவ்யா மற்றும் அலுவலர்கள் செய்திருந்தனர்.

**வனச்சரகர்களுக்கு கள பயிற்சி**

கூடலூர் : முதுமலை புலிகள் காப்பகத்தில், வனச் சரகர்களுக்கு சிறப்பு கள பயிற்சி அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு வன உயிரின பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்று வரும் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா மாநிலங்களை சேர்ந்த, 35 வனச் சரகர்களுக்கு முதுமலை புலிகள் காப்பகத்தில் கடந்த, 15ம் தேதியில் இருந்து, சிறப்பு கள பயிற்சி முகாம் நடந்து வருகிறது.

மையத்தின் ஒருங்கிணைப்பாளர் சந்திரசேகர் தலைமையில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. முதுமலை கள இயக்குனர் சீனிவாசரெட்டி, துணை இயக்குனர் சந்திரன் ஆகியோர், வனச்சட்டங்கள் குறித்து வகுப்புகளை எடுத்தனர். நேற்று இவர்களுக்கு முதுமலையில் கள பயிற்சி அளிக்கப்பட்டது. அதில், 'வன விலங்கு கணக்கெடுப்பு பணிகள், மரங்கள், செடிகளை இனம் காண்பது, வன விலங்குகளின் வாழ்க்கை முறைகள், வனப்பாதுகாப்பில் ஆதிவாசி மக்களின் பங்கு' குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. நாளை இந்த பயிற்சி முகாம் நிறைவுபெறுகிறது.

**மஞ்சள் சாகுபடியில் ஆர்வம் காட்டும் தேனி விவசாயிகள்**

தேனி:மஞ்சள் அதிகம் விளையும் பகுதிகளில் தொடர் மழை பாதிப்பால் பரப்பளவு குறைந்த நிலையில், தேனி மாவட்டத்தில் அதன் சாகுபடி பரப்பு அதிகரித்துள்ளது. தேனி தோட்டக்கலை பயிர்கள் அதிகம் விளையும் மாவட்டம். இங்கு அதிகளவில் சாகுபடி செய்யப்பட்ட திசு வாழையிலும், திராட்சையிலும் காஞ்சாரை, பழ வெடிப்பு நோய்கள் பாதிப்பால் சேதம் அதிகமானது. மகசூல் அதிகரித்தால் உரிய விலை கிடைக்காமல் விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்குள்ளாகி வருகின்றனர். பயிர்களில் நோய் தாக்கமும், நிலை இல்லாத விலையும் விவசாயிகளை சிரமத்திற்குள்ளாக்குகிறது. இதனால் தேனி மாவட்ட விவசாயிகள் சமீபமாக மாற்று சாகுபடிகளில் ஆர்வம் காட்டுகின்றனர்.

தேனி ஊஞ்சாம்பட்டி, போடி உள்ளிட்ட பகுதி விரலி மஞ்சள் கிழக்கு சாகுபடி செய்துள்ளனர். பத்துமாத மஞ்சள் சாகுபடி லாபகரமானதாக உள்ளது என விவசாயிகள் கூறுகின்றனர்.

விவசாயி காளிராஜ், "வாழை, திராட்சை போன்ற சாகுபடியில் நோய் தாக்கம் அதிகரித்து வருகிறது. ஆனால் மஞ்சள் சாகுபடியில் பெரிய அளவில் நோய் பாதிப்பு இல்லை. இலைப்புள்ளி நோய்,படர்தாமரை, செம்பேன் போன்ற நோய் பாதிப்பு ஏற்பட்டால் இலை கருகும். இதற்கு ஆர்கானிக் செல் மருந்தை நீரில் கலக்கி வேரில் தெளிக்க வேண்டும். பஞ்சகாவியத்தை இலையில் தெளித்தால் நோய் கட்டுப்படுகிறது. மூன்று உரம் வைக்க வேண்டும். அறுவடைக்கு ஈரோடு பகுதியில் இருந்து தொழிலாளர்கள் வரவழைத்து மஞ்சள் வெட்டி எடுக்கப்படுகிறது. ஒரு செடியில் ஒரு கிலோ முதல் ஒன்னரை கிலோ வரை மஞ்சள் கிடைக்கும்.

அதனை வேகவைத்து, வெயிலில் காய வைத்து "பாலீஸ்' போட்டு மார்க்கெட்டிற்கு கொண்டு செல்கின்றனர். மஞ்சள் அதிகம் விளையும் பவானி, ஈரோடு பகுதிகளில் பருவமழை தொடர் மழையால் அதன் சாகுபடி பரப்பு குறைந்துள்ளதாக தெரிகிறது. தேனி மாவட்டத்தில் மஞ்சள் சாகுபடி அதிகரித்துள்ளது. பங்குனியில் அறுவடைக்கு வரும். ஒரு குவிண்டால் தற்போது ரூ.9 ஆயிரம் விலை போகிறது. இது ரூ.11 ஆயிரம் வரை விலை உயர வாய்ப்பு உள்ளது' என்றார்.

**திண்டுக்கல்லில் கசப்பு கரும்பு**

திண்டுக்கல்;திண்டுக்கல்லில் ஒரு கட்டு(10கரும்பு) கரும்பு விலை ரூ.400க்கு விற்கப்படுகிறது.

திண்டுக்கல் மாவட்டத்தில் சில இடங்களில் போதிய மழையில்லாததால், சாணார்பட்டி, நத்தம், நெய்க்காரபட்டி, காவல்பட்டி, பாப்பம்பட்டி, ஒட்டன்சத்திரம் பகுதியில் கரும்பு விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. வழக்கமாக கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகள் கூட இந்தாண்டு கரும்பு பயிரிடவில்லை. பொங்கல் பண்டிகைக்கு 2 வாரங்களே உள்ளதால், பெரியகுளம், தேனி,கம்பம் பகுதிகளில் கரும்புகள் வாங்கி திண்டுக்கல், பழநி, ஒட்டன்சத்திரம் பகுதிகளில் வியாபாரிகள் விற்பனை செய்கின்றனர். கடந்தாண்டு ஒரு கட்டு கரும்பு (10கரும்பு) ரூ. 250 முதல் ரூ. 350 க்கும், பொங்கல் முன்தினம் ஒரு கட்டு ரூ. 500 வரைக்கும் விற்றது.இவ்வாண்டு வரத்தும் குறைந்ததால் ஒரு கரும்பு ரூ.35 முதல் ரூ.45 க்கும்,ஒரு கட்டு கரும்பு ரூ. 350 முதல் ரூ.400 க்கு விற்பனையாகிறது.வியாபாரி ஒருவர் கூறுகையில்," மழையில்லாததால் கரும்பு விளைச்சல் இல்லை. வெளியூரிலிருந்து வாங்கி வந்து விற்பனை செய்கிறோம். இதனால் விலை கடந்தாண்டை விட அதிகரித்துள்ளது. பொங்கல் நேரத்தில் இன்னும் அதிகரிக்கும்' என்றார்.

**தேனியில் பனிப்பொழிவால் குறைந்தது மல்லிகை வரத்து**

தேனி:அதிக பனிப்பொழிவால் தேனி மார்க்கெட்டிற்கு மல்லிகை வரத்து மிக குறைந்து, அதன் விலை கிலோ 1,200யை எட்டியுள்ளது. தேனி மாவட்டத்தில் பல வகை பூக்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகின்றன. ரோஜா, சம்மங்கி, செவ்வந்தி பூக்கள் சீலைம்பட்டி, கோட்டூர் பகுதிகளில் அதிகம் சாகுபடியாகிறது.

உற்பத்தி பாதிப்பு:கார்த்திகை, மார்கழியில் கடும் பனிப்பொழிவு இருப்பதால் மல்லிகை உற்பத்தி பாதித்துள்ளது. கோடையில் ஒரு மல்லிகை செடியில் ஒருகிலோ பூ பூக்கும். தற்போது கடும் பனிப்பொழிவால் ஒரு செடியில் 10கிராம் பூ அளவிலே கிடைக்கிறது. இதனால் தேனியில் நேற்று மல்லிகை விலை கிலோ ரூ.ஆயிரம் முதல்

1,200யை எட்டியது. கடந்தாண்டு தேனி மாவட்டத்தில் மஞ்சள் செவ்வந்தி அதிகளவில் சாகுபடி செய்ததால் அதிக விளைச்சலால் கிலோ ரூ.30க்கு விற்றது.

இந்தாண்டு சீதோஷ்ண நிலை மாற்றத்தால் மஞ்சள் செவ்வந்தி உற்பத்தி குறைந்து கிலோ ரூ.150க்கு விற்பனையாகிறது. பூ மார்கெட் வியாபாரி செந்தில்குமார் கூறுகையில், ""மல்லிகை வரத்து குறைந்ததால் விலையும் அதிகபட்சமாக கிலோ ரூ.1,200 வரை உயர்ந்துள்ளது. தை பொங்கலுக்கு பிறகு தான் மல்லிகை வரத்து அதிகரிக்கும். இந்த ஆண்டு பூக்கள் விலை உச்சத்தில் உள்ளது. தற்போது வருஷநாடு, கடமலைக்குண்டு பகுதி காடுகளில் இயல்பாக முளைத்துள்ள துளசி செடியினை விவசாயிகள் பறிந்து கிலோ ரூ.15க்கு விற்கின்றனர். மார்க்கெட்டில் துளசி தான் விலை குறைவு' என்றார்.

**நிலத்தடி நீர்மட்டம் உயர்வு: சொட்டு நீர் பாசனத்தில் ஆர்வம்**

பள்ளிபாளையம்: பள்ளிபாளையம் பகுதியில் பெய்த தொடர் மழையால், கிணறு, ஏரி நிரம்பி விட்டது. கடந்த மாதம் பெய்த தொடர் மழையால், பள்ளிபாளையம் சுற்று வட்டாரத்தில் உள்ள கிணறு, குளம், குட்டை, ஏரி ஆகியவை நிரம்பி விட்டது. இதில், பல கிணற்றில் கைக்கு எட்டும் தூரத்தில் தண்ணீர் வந்து விட்டதால், நிலத்தடி நீர் மட்டமும் உயர்ந்துள்ளது. இதனால், விவசாயிகள் பலர் சொட்டு நீர் பாசனத்தில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதுகுறித்து விவசாயி நந்தகோபால் கூறியதாவது: நிலத்தடி நீர் மட்டம் உயர்வால், சொட்டு நீர் பாசனத்தில் ஆர்வம் காட்டி வருகிறோம். ஒரு ஏக்கருக்கு பாய்ச்சும் தண்ணீர், சொட்டு நீர் பாசனத்தில் இரண்டு ஏக்கருக்கு பாய்ச்ச முடியும். சொட்டுநீர் பாசனத்தில் எந்த பகுதிக்கு தண்ணிர் செல்லவேண்டும் என, வால்வு மட்டும் திருப்பி விட்டால் போதும், தண்ணீர் செல்லும். சொட்டு நீர் பாசனத்தை பயன்படுத்தி

வாழை, கரும்பு, மக்காச்சோளம், காய்கறி பயிர்களை சாகுபடி செய்து கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறினார்.

**விலையில்லா ஆடு வழங்கல்**

திருச்செங்கோடு: திருச்செங்கோடு ஒன்றியம், வரகூராம்பட்டி அடுத்த, இளம்புளியாம்பாளையம் பகுதியில் தமிழக அரசின் விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தில், 81 பயனாளிகளுக்கு தலா, தலா நான்கு ஆடுகள் என, 324 விலையில்லா ஆடுகள் வழங்கும் விழா நடந்தது. மாவட்ட கலெக்டர் தட்சிணாமூர்த்தி தலைமை வகித்தார். தமிழக தொழில் மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சர் தங்கமணி, பயனாளிகளுக்கு ஆடுகளை வழங்கி, அரசின் நலத்திட்ட உதவிகள் குறித்து பேசினார். கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் சக்திவேல் திருச்செங்கோடு ஒன்றியக்குழு தலைவர் பாலசுப்பிரமணியம் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**கறவை மாடுகள், ஆடுகளுக்கு மருத்துவ பரிசோதனை முகாம்**

தர்மபுரி: தர்மபுரி அடுத்த கோணங்கிநாயக்கனஹள்ளியில், கறைவை மாடுகள் மற்றும் ஆடுகளுக்கு மருத்துவ பரிசோதனை முகாம் நடந்தது. முகாமை கலெக்டர் விவேகானந்தன் துவக்கி வைத்தார். முகாமில், விலையில்லா திட்டம் மூலம் வழங்கப்பட்ட, 274 ஆடுகள் மற்றும் அவற்றின் மூலம் பிறந்த, 24 குட்டிகள் உட்பட மொத்தம், 487 கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம் செய்யப்பட்டது. மேலும், முகாமில், 14 பசுக்கள் உட்பட 26 கால்நடைகளுக்கு அல்ட்ரா சவுண்டு ஸ்கேன் கருவி மூலம் சினை பரிசோதனை மற்றும் சினை பிடிக்காமை தொடர்பான காரணங்கள் கண்டறியப்பட்டு, கால்நடை வளர்ப்போருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. தர்மபுரி கால்நடை பராமரிப்புத் துறை துணை இயக்குனர் மகேஸ்வரன், உதவி இயக்குனர்கள் ஜெகன்நாதன், இளங்கோவன் உட்பட பலர் பங்கேற்றனர்.

**வீட்டு தோட்டத்தில் கிடைக்கிறது உற்சாகம், புத்துணர்ச்சி**

வீட்டிற்கு ஒரு மரம் அவசியம் வளர்க்க வேண்டும் என்ற விழிப்புணர்வு மக்களிடத்தில் ஏற்பட்டு வந்தாலும், தாங்கள் வசிக்கும் வீடுகளில் சிறிய இடம் இருந்தாலும் அதில் தோட்டம் அமைத்து பராமரித்து வருவதில் மக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். தங்களுக்கு பிடித்தமான பூஞ் செடிகள், காய் கறி தோட்டம் அமைக்கின்றனர். இந்த வகையில் அருப்புக்கோட்டை சொக்கலிங்கபுரம் வடக்கு ரத வீதியில் வீட்டு தோட்டம் அமைத்து நன்கு பராமரித்து வருகிறார் சுந்தர லட்சுமி.

இவர் வீட்டின் முன்புற பகுதியில் உள்ள "பார்ம்ஸ்' மரங்கள், சப்போட்டா, மாதுளை, சீதா, குரோட்டன்ஸ் போன்றவைகளுடன், முல்லை, பிச்சி, செம்பருத்தி வகைகள், பாரிஜாதம், இட்லி பூ, கனகராம்பரம் போன்ற பூச் செடிகளையும் வளர்த்து வருகிறார்.

மருதாணி, துளசி, கருவேப்பநிலை, கற்பூர வல்லி போன்ற மருத்துவ குணம் கொண்டி செடிகளும் இவரது தோட்டத்தில் காணலாம். ஒவ்வொரு செடிகளையும் தனி தனி தொட்டிகளில் பராமரித்து வருகிறார். பாத்தி கட்டி 15 நாட்களுக்கு 1 முறை வேப்பம் புண்ணாக்கு மற்றும் கடலை புண்ணாக்கு கலந்த இயற்கை உரம் இடுகிறார்.

சுந்தரலட்சுமி கூறுகையில், ""நான் கடந்த 7 ஆண்டுகளாக வீட்டு தோட்டம் அமைத்து பராமரித்து வருகிறேன். இயற்கையாகவே எனக்கு தோட்டம் அமைக்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. வெளியில் சுற்றுலா, உறவினர்கள் நிழ்ச்சிக்கு சென்றாலும், அங்குள்ள பூச்செடிகள் மற்றும் நர்சரி கார்டன்களுக்கு சென்று செடிகள் வாங்கி வருவேன். அருப்புக்கோட்டை சுற்று பகுதியில் கிடைக்கும் மண் வகைகளை வைத்து, செடிக்கு உகந்த மண்ணை இடுவேன். தினமும் காலை மாலை இரு வேளைகளிலும் தோட்டத்தை பார்வையிடுவேன். இதனால் மனதிற்கு உற்சாகம், புத்துணர்ச்சி கிடைக்கிறது. பராமரிப்பு பணி

செய்யும் போது உடலுக்கு சிறிய உடற் பயிற்சியும் கிடைக்கிறது. சமையலுக்கு தேவையான கருவேப்பலை, கொத்தமல்லி இலைகளையும் அவ்வப்போது பறித்து கொள்கிறோம்," என்கிறார்.

கண்மாயை பாதுகாப்போம் மரக்கன்றுகளை நடுவோம்: அருப்புக்கோட்டை இலட்சிய இளைஞர்கள் டிரஸ்ட் நிர்வாகி ராஜபாண்டி ,""நம் வாழ்வாதாரத்தின் அடிப்படையே நீர்நிலைகளை பாதுகாத்தல், சீரமைத்தல் மற்றும் பராமரித்தலே. இன்றைய கால கட்டத்தில் அவசியம், அவசரமும் கூட. நம் நகரில் உள்ள செவல் கண்மாய், பெரிய கண்மாய், தூம்பகுளம் கண்மாய்கள் மாசு அடைந்து, ஆகாயதாமரைகள், கருவேலர மரங்கள் வளர்ந்து கழிவு குட்டைகளாக உள்ளன. இவற்றை சீரமைக்கும் விதமாக எங்கள் இலட்சிய இளைஞர்கள் டிரஸ்ட் மூலம் முடிவு செய்துள்ளோம். ஓராண்டு திட்டமாக நீர் நிலைகளின் கரையோர பகுதிகளை வலுப்படுத்தி கண்மாய்களின் கரை பகுதியில் மரங்கன்றுகளை நட்டு பராமரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. நகரில் உள்ள சமூக நல அமைப்புகள், சமூக ஆர்வலர்களை ஒருங்கிணைத்து செயல்படுத்த உள்ள இந்த திட்டத்தில் இதுவரை ஆயிரத்து 700 பேர்கள் தயார் நிலையில் உள்ளனர். நகரை சேர்ந்த வெளி நாடுகளில் வாழும் இளைஞர்கள் இதற்கு ஆதரவு அளித்துள்ளனர். நீரநிலைகளில் குப்பை கொட்டுவதை தவிர்க்கும் வகையில், விழிப்புணர்வு மக்களிடத்தில் ஏற்படுத்த துண்டு பிரசுரம் வினியோகிக்க உள்ளோம்.

நீர்நிலைகளை ஆக்கிரமிப்பு செய்து இருப்பவர்கள் தாமாகவே முன் வந்து அகற்றிட வேண்டும் எனவும், சம்பந்தப்பட்ட அரசு துறையினர் அதற்கான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறோம்,"என்றார். இவரை 85083 41333ல் தொடர்பு கொள்ளலாம்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வடமாநிலங்களில் தேவை அதிகரிப்பு நாமக்கல் முட்டைக்கு கடும் கிராக்கி**




நாமக்கல்: வடமாநிலங்களில் கடும் குளிர் நிலவுவதால் முட்டை தேவை அதிகரித்துள்ளது. இதனால் நாமக்கல் முட்டைக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து விலை உயரும் என பண்ணையாளர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். நாமக்கல் மண்டலத்தில் உள்ள 750 கோழிப்பண்ணைகளில் 5 கோடி முட்டையின கோழிகள் வளர்க்கப்படுகின்றன. தினமும் 3.40 கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகிறது. குளிர்காலம் துவங்கியுள்ளதால், முட்டை விற்பனை தமிழகம், கேரளாவில் அதிகரித்துள்ளது. கொல்கத்தா, உத்தரபிரதேசம், பீகார் போன்ற வடமாநிலங்களில் கடுமையான குளிர் நிலவுவதால், அங்கு முட்டை சாப்பிடுபவர்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. இதனால் முட்டை தேவை அதிகரித்துள்ளது. ஐதராபாத், விஜயவாடா

பகுதியில் உற்பத்தியாகும் முட்டைகள் இதற்கு முன் சென்னை, கேரளாவுக்கு விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது. தற்போது குளிர் காரணமாக டெல்லி, உத்தரபிரதேசம், பீகாருக்கு ஆந்திராவில் உற்பத்தியாகும் முட்டைகள் அதிக அளவில் செல்கிறது. தமிழகத்துக்கு ஆந்திர முட்டைகள் வரத்து நின்றுவிட்டது. இதனால் நாமக்கல் முட்டைக்கு தற்போது கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. இதனால் தொடர்ந்து விலை உயர்த்தப்பட்டு வருகிறது. நாமக்கல் மண்டலத்தில் ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 402 காசாக உள்ளது. இம்மாத துவக்கத்தில் இருந்து, முட்டை விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. கடந்த ஜூன் மாதம் ஒரு முட்டையின் விலை, அதிகபட்சமாக 420 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. ஆனால் இந்த விலை ஒரே வாரத்தில் சரிவை சந்தித்தது. தற்போது அனைத்து மண்டலத்திலும் முட்டையின் சராசரி விலை ரூ. 4 ஆக உள்ளது. நாமக்கல் மண்டலத்தில் ஒரு முட்டையின் உற்பத்தி செலவு 360 காசாக உள்ள நிலையில், முட்டையின் பண்ணை கொள்முதல் விலை உயர்ந்து வருவதால் கோழிப்பண்ணையாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இம்மாத துவக்கத்தில் பெய்த கனமழையால் சென்னை, திருவள்ளூர், கடலூர், காஞ்சிபுரம் போன்ற மாவட்டங்களில் முட்டை விற்பனை பாதிக்கப்பட்டது. தற்போது அங்கும் முட்டை விற்பனை அதிகரிக்க தொடங்கியுள்ளது.

2 மாதம் வரை உயரும் தமிழ்நாடு முட்டைக்கோழி பண்ணையாளர்கள் சம்மேளன துணைத்தலைவர் வாங்கிலி சுப்பிரமணியம் கூறியதாவது: வடமாநிலங்களில் நிலவும் கடுமையான குளிரால், முட்டை விற்பனை நாடு முழுவதும் அதிகரித்து வருகிறது. நாமக்கல் மண்டல முட்டைக்கு நல்ல விலை கிடைக்கிறது. இந்த ஆண்டின் முதல் 7 மாதங்கள் கோழிப்பண்ணை தொழிலில் பெரும் நஷ்டம் ஏற்பட்டது. ஒரு முட்டை

விற்பனையில் இழப்பு ஏற்பட்டது. இதனால் பல பெரிய பண்ணையாளர்கள் கூட தொழில் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. தற்போது விலை உயர்ந்து வருவதால், கோழிப்பண்ணை தொழிலில் பண்ணையாளர்களுக்கு புதிய நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. ஜனவரி, பிப்ரவரி என 2 மாதமும் வடமாநிலங்களில் குளிர் நீடிக்கும். இதனால் மேலும் 2 மாதம் ஆந்திர முட்டைகள் தமிழகத்துக்கு வராது. அவை வடமாநிலத்துக்கு சென்றுவிடும். கோழித்தீவனம், தட்ப வெப்பநிலை போன்ற பல காரணங்களால் 10 சதவீத முட்டை உற்பத்தி நாமக்கல் பண்ணைகளில் குறைந்துவிட்டது. இதனால் உற்பத்தியாகும் முட்டைக்கு நல்ல டிமாண்ட் உள்ளது. வியாபாரிகள் யாராவது முட்டை விலையை குறைத்து விற்பனை செய்தால் சம்மேளனத்துக்கு தெரிவிக்கலாம். வரும் 2 மாதமும் முட்டை விலை மேலும் உயரும். இவ்வாறு வாங்கிலி சுப்பிரமணியம் கூறினார்.

## 1.05 டிஎம்சி தண்ணீர் தேக்கம் மாயனூர் கதவணையால் 60 ஆயிரம் ஏக்கரில் பாசனம்

கரூர், : மாயனூர் கதவணையில் 1.05 டிஎம்சி தண்ணீர் தேக்கப்பட்டதால் 60ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெறுகிறது. மாயனூர் கதவணையை கரூர் மாவட்ட கலெக்டர் ஜெயந்தி பார்வையிட்டார் பின்னர் அவர் கூறியதாவது: கரூர் மாவட்டம் விவசாய பணிகளை பிரதானமாக கொண்ட மாவட்டம். மழைக் காலங்களை தவிர மற்ற நாட்களில் விவசாய பணிகளுக்கு போதிய தண்ணீர் வசதி இல்லாததை கருத்தில் கொண்டு காவிரியாற்றில் தடுப்பணை மூலம் தண்ணீர தேக்கி பயன்படுத்தும் விதமாக தடுப்பணை கட்டவேண்டும் என்பது காவிரியாற்றின் கரைப்பகுதியில் உள்ள விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கை. இதன்படியே மாயனூர் கடடளை பகுதியில் காவிரியாற்றில் தடுப்பணை கட்டப்பட்டது. இந்த தடுப்பணை மூலம் கடந்த ஆண்டு முதல் 1.05 டிஎம்சி தண்ணீர் தேக்கி வைத்து விவசாயிகள் பயன் பெற்று

வருகின்றனர். மேலும் மாயனூர் தடுப்பணையில் இருந்து சுமார் 10 கிமீ பரப்பளவில் கிராம பகுதியில் ஆழ்குழாய் கிணறுகள், விவசாய நிலங்களில் உள்ள கிணறுகளில் நீர்மட்ட அளவு உயர்ந்து நிலையாக இருப்பதுடன் விவசாயத்திற்கு மட்டுமின்றி பொதுமக்களின் பயன்பாட்டிற்கும் தேவையான தண்ணீர் பெற்று பயனடைகின்றனர்.

கிருஷ்ணராயபுரம், குளித்தலை தாலுகாக்களில் அதிக விளைநிலங்கள் உள்ளதால் தொடர்ந்து விவசாயம் செய்வதற்காக நீர்பாசன வசதியை ஏற்படுத்தி தரும் வகையில் மாயனூர் காவிரி ஆற்றின் குறுக்கே கதவணையில் இருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டு விவசாய பணிகள் நடைபெறுகிறது. கரூர் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழை அளவு 652.2மிமீ. டிசம்பர் மாதம் முடிய கிடைக்க வேண்டிய சராசரி மழையான 652.2மிமீக்கு இதுவரை 819.6 மிமீ மழைகிடைக்க பெற்றுள்ளது. இந்த நீரை வீணாக்காமலும், காவிரி அணையில் இருந்துவரும் உபரிநீரையும் சேர்த்து 1.05டிஎம்சி தண்ணீர் தேக்கிவைக்கப்பட்டு பயனுள்ளதாக இருந்து வருகிறது. தற்போது தேக்கி வைக்கப்படும் தண்ணீரை கொண்டு காவிரி ஆயக்கட்டு விவசாயத்திற்காக வடகரை, தென்கரை, கட்டளை மேட்டுவாய்க்கால், புதிய கட்டளை மேட்டு வாய்க்கால், கிருஷ்ணராயபுரம் வாய்க்கால் ஆகிய வாய்க்கால்களின் மூலம் 60ஆயிரம் ஏக்கர் விளைநிலங்கள் நீர்பாசனவசதி பெற்றுள்ளன. மேலும் இந்த கதவணையில் உபரிநீர் தேக்கப்படுவதால் மேட்டூர் அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீர் தேவை குறைக்கப்பட்டுள்ளது. கடந்த ஒருமாதமாக வடகிழக்கு பருவமழையால் தேக்கப்பட்டு தண்ணீர் தேவைக்கேற்ப திறக்கப்படுவதால் 8டிஎம்சி தண்ணீர் மேட்டூர்அணையில் சேமிக்கப்பட்டுள்ளது.

இந்த கதவணையிலிருந்து பின்னோக்கி நெரூர் வரை 10கிமீ தண்ணீர்தேங்கி நிற்பதால் கரையோர ஆழ்குழாய் கிணறுகள், பாசன கிணறுகள், நிலத்தடிநீர் செறிவூட்டப்பட்டதால் தொடர்ந்து பாசனத்திற்காக தண்ணீர் கிடைத்து வருகிறது. ஆண்டு முழுவதும்

விவசாய பணிகளை திட்டமிட்டபடி செய்து விளைபொருட்கள் உற்பத்திஅதிகரித்து வேலைவாய்ப்பும் பெருகி தனிநபர் வருமானமும் உயர்கிறது. தொழில்நுட்பங்களை கொண்ட பயிர்வகையை பயிரிட்டு பயன்பெறுகின்றனர்.

கதவணை மூலம் அமராவதி ஆற்றில் சோமூர்வரை தண்ணீர் பின்நோக்கி நிற்பதால் அமராவதி ஆயக்கட்டு சார்பாக மணவாசி, சோமூர், கட்டளை, ரெங்கநாதபுரம், பகுதிகளில் மணவாசி ஆயக்கட்டை சேர்ந்த 241.17 ஏக்கரும். சோமூர் ஆயக்கட்டைசேர்ந்த 244.35 ஏக்கரும், என 485.52 ஏக்கர் விளை நிலங்களை நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து பாசன வசதிபெறுகிறது என்றார். இந்த ஆய்வின்போது காவிரிஆற்று பாதுகாப்புக்கோட்ட உதவி செயற்பொறியாளர் திருவேட்டைசெல்வம், வேளாண்மைதுறை இயக்குனர் மதனகோபால், ஆற்றுபாதுகாப்புக்கோட்ட உதவிபொறியாளர் சதீஷ், கலந்துகொண்டனர்.

**வேளாண் முதலீட்டு கடன் முகாம்**

குளித்தலை, : குளித்தலை, முசிறி கிளை இந்தியன் வங்கி சார்பில் வேளாண் முதலீட்டு கடன் வழங்கும் முகாம் குளித்தலையில் நடைபெற்றது. இம்முகாமில் கே.பேட்டை, திம்மம்மபட்டி, வேங்காம்ப்டி, பொய்யாமணி, கே.புதுப்பட்டி, தண்ணீர்பள்ளி பகுதி விவசாயிகள் 128 பேருக்கு மொத்தம் ரூ.1 கோடியே 82 லட்சத்து 20 ஆயிரம் வேளாண் முதலீட்டு கடன் வழங்கப்பட்டது. முன்னாள் ஒன்றிய குழு தலைவர் பொய்யாமணி தியாகராஜன் தலைமை வகித்தார். திருச்சி மண்டல விவசாய அதிகாரி சரத்சந்தர் மற்றும் முருகன், சிவகுமார் முன்னிலை வகித்தனர். குளித்தலை கிளை மேலாளர் வெள்ளைக்கண்ணு வரவேற்றார். நிகழ்ச்சியில் திருச்சி மண்டல பொது மேலாளர் செல்வராஜன் பேசியதாவது, வாங்கிய கடனை உரிய காலத்தில் திரும்ப

செலுத்தினால் மீண்டும் வங்கி கடன் தர தயார் நிலையில் இருக்கும். அதனால் கடனை திருப்பி செலுத்த வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்கிக்கொள்ள வேண்டும். விவசாயிகள் தங்கள் பகுதியில் உழவர் மன்றங்களை ஆரம்பித்து அதன்மூலம் விவசாயம் சார்ந்த தொழிலுக்கு முன்னுரிமை கொடுத்து அதன்மூலம் கடன்பெறலாம் என்றார்.முசிறி கிளை மேலாளர் நாகராஜன் நன்றி கூறினார்.

**நாகாச்சியில் பண்ணைப் பள்ளி பயிற்சி**

திருக்காட்டுப்பள்ளி, : திருக்காட்டுப்பள்ளி அடுத்த நாகாச்சியில் நெற்பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை தொழில்நுட்பத்தில் பண்ணைப்பள்ளி பயிற்சி கடந்த 22ம்தேதி நடந்தது. இதில் 25 விவசாயிகள் கலந்து கொண்டனர். நெல் வயல்களில் தீமை மற்றும் நன்மை செய்யும் பூச்சிகள், வயல் சூழல் குறித்த பயிற்சியை ஓய்வு பெற்ற விதைச்சான்று இயக்குநர் வெங்கடேசன் பயிற்சி அளித்தார். கதிர் உருவாகும் பருவத்தில் தாக்கும் பூச்சிகள், நோய்களை கண்டறிதல், ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு முறைகள், விதைத் தேர்வு, இலை வழி உரமிடுதல், மேலாக நடவு செய்தல், பறவை இருக்கை அமைத்தல் குறித்த விளக்கங்கள் அளிக்கப்பட்டன. பயிற்சியில் பூதலூர் வேளாண்மை உதவி இயக்குநர் பிரபாகர், அலுவலர்கள் உமாமகேஸ்வரி, பால்ஜான்சன், கவிதா, வினோத்குமார், ஆரோக்யசாமி கலந்து கொண்டனர்.

**ஓடுகிற தண்ணீரில் அணை கட்டும் தொழில்நுட்பம் உலகிற்கு தந்தவர்கள் தமிழர்கள் வேளாண் நிபுணர் பாமயன் பேச்சு**

திருமங்கலம், : 'ஓடுகிற தண்ணீரில் அணை கட்டுகிற தொழில் நுட்பத்தை உலகிற்கு கற்றுத் தந்தவர்கள் தமிழர்கள்' என இயற்கை வேளாண்மை நிபுணர் பாமயன் தெரிவித்தார்.திருமங்கலம் இலக்கிய பேரவையின்

259வது கூட்டம் லிங்கா மெட்ரிக் பள்ளி வளாகத்தில் நடந்தது. தலைவர் பூலோக சுந்தரவிஜயன் தலைமை வகித்தார். துணைத்தலைவர் ஆண்டனி, புரவலர் ஆசைத்தம்பி முன்னிலை வகித்தனர். இலக்கியப் பேரவை செயலாளர் சங்கரன் வரவேற்றுப் பேசினார். ‘குறளும் பொருளும்’ என்ற தலைப்பில் பால்பாண்டியன், ‘அறிவோம் வரலாறு’ என்ற தலைப்பில் தமிழ்ச்செல்வன், ‘நகை உவகை’ என்ற தலைப்பில் கரிசல்பட்டி சுந்தரராஜன் பேசினர். ‘தமிழக வேளாண்மையின் தொன்மையும் சிறப்பும்’ என்ற தலைப்பில் இயற்கை வேளாண்மை நிபுணர் பாமயன் பேசினார். தமிழர்களின் ஐம்பெருந்திணைகள், அவற்றில் நீர் மேலாண்மை, வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கிப் பேசினார். அவர் பேசியதாவது:தண்ணீரைக் கட்டுப்படுத்தி வேளாண்மை செய்யும் நீர் மேலாண்மை தொழில்நுட்பத்தை மருத நிலத்தில் வசித்த தமிழர்கள் செய்தனர். இதற்காக, ஓடுகிற ஆற்றை தடுத்து, நீரைத் தேக்கி வைத்து விவசாயத்துக்குப் பயன்படுத்துகிற தொழில்நுட்பம் கண்டறியப் பட்டது. உலகிலேயே பழமையான, இன்றும் பயன்பாட்டில் இருக்கிற அணை, கரிகாலன் கட்டிய கல்லணை என்று வரலாற்று ஆசிரியர்கள் உறுதி செய்கின்றனர்.‘ஓடுகிற தண்ணீரில் எவ்வாறு அணை கட்டுவது என்ற தொழில்நுட்பத்தை உலகிற்குக் கற்றுத் தந்த இந்த மூத்த மக்களுக்கு எனது வணக்கத்தை பதிவு செய்து கொள்கிறேன்’ என்று சர் ஆர்தர் காட்டன் என்ற ஆங்கிலப் பொறியாளர் கல்லணையைக் கண்டு வியந்து பேசியிருக்கிறார். காரணம், 1863ம் ஆண்டு வரைக்கும் ஓடும் தண்ணீரில் அணை கட்டும் தொழில்நுட்பம் உலகின் எந்தப் பகுதியிலும் அறிமுகம் ஆகியிருக்கவில்லை. கல்லணை கட்டிய காலத்தில், இப்போது இருக்கிற மேட்டூர், கிருஷ்ணராஜசாகர் அணைகள் இல்லை. வன வளமும், மழை வளமும் மிகுதியாக இருந்த அந்தக்காலத்தில், ஓடும் தண்ணீரில் அணை கட்டிய நுட்பம், தமிழர்களின் உச்சக்கட்ட தொழில்நுட்பத்திறனுக்குச் சான்று.

ஆன்மீகத்தில் நாட்டமுள்ளவர்கள் புனிதத்தலங்களுக்கு சென்று வருவது போல, தமிழர்கள் ஒவ்வொருவரும் - முக்கியமாக உழவர்கள் - நமது பெருமையான கல்லணையை கட்டாயம் சென்று பார்த்து வரவேண்டும். தண்ணீர் தேக்கும் ஏரி தொழில்நுட்பத்திலும் தமிழர்கள் சிறந்து விளங்கினர்.இவ்வாறு பேசினார். இலக்கியப் பேரவை பொருளாளர் முத்துக்கிருஷ்ணன் நன்றி கூறினார். துணைச் செயலாளர் ஜெயபாலகிருஷ்ணன், நல்லதம்பி உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**கம்பு பயிரிட்டால் காசு வேளாண்துறை ஆலோசனை**

பழநி, : கம்பு பயிரிட்டால் காசு பார்க்கலாமென வேளாண்துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர். பழநி மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களில் தற்போது விவசாய பணிகள் துவங்கி உள்ளன. தற்போது இறவை பாசன வசதி உள்ள விவசாயிகள் கம்பு பயிரிடுவதற்கு ஏற்ற தருணமாகும். கோ-7, கோ (சியு) 9, ஐசிஎம்வி-221, ராஜ்-171, எக்ஸ்-7 ஆகியவை ஏற்ற ரகங்கள் ஆகும். எக்டேருக்கு 3.75 கிலோ விதை தேவைப்படும். நாற்றாங்கால் எக்டேருக்கு 7.5 சென்ட் அளவிற்கு இருக்க வேண்டும். 3*1.5 மீட்டர் அளவு கொண்ட 6 படுக்கைகள் 1 சென்டில் அமைத்து அரை மீட்டர் கால்வாய், அரை அடி ஆழத்தில் ஒவ்வொரு படுக்கையை சுற்றி அமைக்க வேண்டும். எக்டேருக்கு 750 கிலோ தொழு உரம் இட வேண்டும். தேன் ஒழுகல் நோய் பாதித்த விதைகளை நீக்க 10 லிட்டர் நீரில் 1 கிலோ உப்பினை கரைத்து விதைகளை அதில் கொட்டி மிதக்கும் விதைகளை நீக்கி, நல்ல தண்ணீர் கொண்டு 3-4 முறை விதைகளை கழுவி பின்பு நிழலில் உலர்த்த வேண்டும்.தண்டு ஈ மற்றும் தண்டு துளைப்பான் நோய் தாக்காமல் இருக்க குளோரிபைபாஸ் 36 டபிள்யூ.எஸ்.வி அல்லது பாசலோன் 35 இசி, 4 மில்லியுடன் 5 கிராம் பசை இவற்றை 20 லிட்டர் தண்ணீரில் கலந்து விதைக்க வேண்டும். அடிச்சாம்பல் நோய் தாக்காமல்

இருக்க மெட்டலாக்சில் 6 கிராம் உடன் 5 மில்லி தண்ணீர் கலந்து 1 கிலோ விதையுடன் கலக்க வேண்டும். விரல்களால் 1 சென்டிமீட்டர் ஆழத்திற்கு கோடுகள் இட்டு, 1 படுகைக்கு அரை கிலோ விதையினை தூவி மண்ணில் மூட வேண்டும். மிதைல் பாரதியான் மருந்தினை விதைத்தவுடன் தூவி எறும்புகளிலிருந்து பாதுகாக்கலாம். நாற்றுக்களை தண்டு ஈயிலிருந்து காப்பதற்கு கார்போபியூரான் 3ஜி 600 கிராம் கலந்து தூவி விட வேண்டும். 30 சென்டிமீட்டர் கால்வாய் மூலம் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். மண்ணில் நீர் உறிஞ்சிக்கொள்ளும் வரை மட்டும் நீர்ப்பாய்ச்ச வேண்டும். 6 மீட்டர் உள்ள பார்கள் 45 சென்டிமீட்டர் இடைவெளியில் அமைக்க வேண்டும். இடைவெளி 45*15 சென்டி மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும். வேளாண் அதிகாரிகள் அறிவுறுத்தியபடி உரங்கள் இட வேண்டும்.கூடுதல் விவரங்களுக்கு விவசாயிகள் அந்தந்த பகுதியில் உள்ள வேளாண் விரிவாக்க அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

**மரக்கன்று நடும் விழா**

சுரண்டை : சுரண்டையில் பசுமை யாத்ரா அறக்கட்டளை சார்பில் திருவாவடுதுறை நடராஜா பெருமாள் கோயில் திருவிழாவை முன்னிட்டு சுரண்டை அதன் சுற்றியுள்ள பகுதியில் சுமார் 101 மரக்கன்று நடும் விழா நடந்தது. பசுமை யாத்ரா அறக்கட்டளை தலைவர் டி.வேலுச்சாமி தலைமை வகித்தார். நிர்வாகிகள் அருணாசலம், வைத்திலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். செப்பரைவலபூமி பசுமை உலகம் அறக்கட்டளை நிறுவனர் மரச்சாமியார் அர்ச்சனன் மரம் வளர்ப்பதின் அவசியம் குறித்து பேசினார். சுரண்டை காவல்நிலைய இன்ஸ்பெக்டர் பெருமாள் மரக்கன்று நட்டி விழாவை தொடங்கி வைத்து மரம் வளர்ப்பதின் அவசியம் குறித்து பேசினார். எஸ்ஐக்கள் கற்பகம் முருகன், ஏட்டுகள் ரமேஷ், முருகேஷ், செல்வராஜ், மாரியப்பன், உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

**பொள்ளாச்சி மார்க்கெட்டில் வாழைத்தார் வரத்து குறைந்தது**

பொள்ளாச்சி

பொள்ளாச்சி மார்க்கெட்டில் வாழைத்தார் வரத்து குறைந்தது. இருப்பினும் கடந்த வார விலையிலேயே ஏலம் சென்றன.

வாழைத்தார் ஏலம்

பொள்ளாச்சி மார்க்கெட்டில் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை மற்றும் புதன்கிழமைகளில் வாழைத்தார் ஏலம் நடைபெற்று வருகிறது. ஏலத்துக்கு பொள்ளாச்சி, ஆனைமலை உள்பட பல்வேறு பகுதிகளில் இருந்து விவசாயிகள் வாழைத்தார்களை விற்பனைக்கு கொண்டு வருகிறார்கள்.

இவற்றை உள்ளூர், வெளியூர் வியாபாரிகள் ஏலம் மூலம் வாங்கி சென்று விற்பனை செய்கிறார்கள். நேற்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் வாழைத்தார் ஏலம் நடைபெற்றது.

வரத்து குறைந்தது

ஏலத்துக்கு மொத்தம் 1300 வாழைத்தார்களே விற்பனைக்கு வந்தன. இதில் செவ்வாழை ரூ.300 முதல் ரூ.800 வரைக்கும், பூவந்தார் ஒன்று ரூ.100 முதல் ரூ.300 வரைக்கும், கற்பூரவள்ளி ரூ.200 முதல் ரூ.400 வரைக்கும், மோரீஸ் ரூ.100 முதல் ரூ.200 வரையும், ரஸ்தாளி ரூ.150 முதல் ரூ.300 வரையும், நேந்திரம் ஒரு கிலோ ரூ.27–க்கும், கதளி ஒரு கிலோ ரூ.22–க்கும் ஏலம் சென்றது.

இது குறித்து வியாபாரிகள் கூறியதாவது:– பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு கடந்த வாரம் 2 ஆயிரம் தார்கள் வந்து இருந்தன. ஆனால் தற்போது 700 தார்கள் குறைவாக வந்து உள்ளது. பொங்கல் பண்டிகையை முன்னிட்டு

கூடுதல் விலை கிடைக்கும் என்பதால் விவசாயிகள் தார்களை அறுவடை செய்யாமல் அப்படியே விட்டு உள்ளனர். மேலும், கடந்த வார விலையிலேயே தார்கள் ஏலம் சென்றன. இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

**ஆத்தூர் காமராஜர் அணை அருகே ரூ.20 கோடியில் புதிய அணை கட்டும் பணி விரைவில் தொடக்கம்**

திண்டுக்கல்

ஆத்தூர் காமராஜர் அணை அருகே ரூ.20 கோடியில் புதிய அணை கட்டும் பணி விரைவில் தொடங்க இருக்கிறது. 18 மாதங்களுக்குள் பணிகளை முடிக்க மாநகராட்சி நிர்வாகம் திட்டமிட்டு உள்ளது.

<u>புதிய அணை</u>

திண்டுக்கல் நகர மக்களின் குடிநீர் தேவையை சமாளிப்பதில் ஆத்தூர் காமராஜர் அணை முக்கிய பங்கு வகிக்கிறது. அந்த அணையில் இருந்து தினந்தோறும் 6½ எம்.எல்.டி. குடிநீர் பெறப்பட்டு வருகிறது. இதே போல், காவிரி கூட்டுக்குடிநீர் திட்டத்தின் கீழ் 9 எம்.எல்.டி. தண்ணீர் பெறப்படுகிறது. நகர மக்களின் குடிநீர் தேவையை சமாளிக்க தினந்தோறும் 28 எம்.எல்.டி. தண்ணீர் தேவைப்படுவதால், தற்போது பெறப்படும் தண்ணீர் பற்றாக்குறையாக உள்ளது. இந்த தட்டுப்பாட்டை சமாளிக்க ஆத்தூர் காமராஜர் அணையில் இருந்து கூடுதல் தண்ணீர் கொண்டுவர ரூ.70½ கோடியில் திட்டம் தயாரிக்கப்பட்டு பணிகள் நடந்து வருகின்றன. இதற்காக காமராஜர் அணையில் இருந்து திண்டுக்கல் வரை ராட்சத குழாய்கள் பதிக்கப்படுகின்றன. இதே போல நகர் பகுதிகளில் அடிக்கடி உடைப்புகள் ஏற்படுவதால் புதிய பகிர்மான குழாய்கள் பதிக்கும் பணியும் மும்முரமாக நடந்து வருகின்றன.

<u>புதிய அணை</u>

இந்த திட்டம் முடியும் போது கூடுதல் தண்ணீர் திண்டுக்கல்லுக்கு கொண்டுவரப்படும். அதிகப்படியான தண்ணீர் எடுக்கும்போது ஆத்தூர் காமராஜர் அணை விரைவில் வறண்டுபோகும் சூழலும் உருவாகும்.

இதனால் கூடுதல் தண்ணீரை தேக்கி வைக்க அங்கு கூடுதலாக புதிய அணை கட்ட மாநகராட்சி நிர்வாகம் திட்டமிட்டது. இதற்காக தயாரிக்கப்பட்ட ரூ.20 கோடி திட்டத்திற்கு அரசு அனுமதி கிடைத்து நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 6 மாதங்களை கடந்தும் பணிகள் இன்னும் தொடங்கியபாடில்லை.

இது குறித்து மாநகராட்சி அதிகாரி ஒருவர் கூறியதாவது:–

தற்போது ஆத்தூர் காமராஜர் அணையில் 4 ஆயிரத்து 500 மில்லியன் லிட்டர் தண்ணீரை சேமித்து வைக்க முடியும். தற்போது கூடுதலாக 800 மில்லியன் லிட்டர் தண்ணீரை சேமித்து வைக்கும் வகையில் புதிய அணை கட்டப்பட இருக்கிறது. ஏற்கனவே டெண்டர் விடப்பட்டு உள்ளது. கவுன்சிலர்களின் ஒப்புதல் பெற்று விரைவில் பணிகள் தொடங்க இருக்கின்றன. இதே போல ஆத்தூர் காமராஜர் அணையும் ஆழப்படுத்தப்பட இருக்கிறது. இந்த பணிகள் அனைத்தையும் 18 மாதங்களில் முடிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**ஈரோடு மாவட்டத்தில் இன்று விலையில்லா ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாம்**

ஈரோடு

ஈரோடு மாவட்டத்தில் 75 இடங்களில் விலையில்லா ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாம் நேற்று நடந்தது. இன்று (ஞாயிற்றுக்கிழமை) 20 ஊராட்சிகளில் குடற்புழு நீக்கம் முகாம் நடக்க உள்ளது.

<u>குடற்புழு நீக்க முகாம்</u>

தமிழக முதல் –அமைச்சர் ஜெயலலிதாவால், 'கிராமங்களில் ஏழ்மையில் வாடும் குடும்பங்களுக்கு விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டம்' அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் கீழ் ஈரோடு மாவட்டத்தில் கடந்த 2014–15–ம் ஆண்டு 4 ஆயிரத்து 838

பேருக்கு ரூ.6 கோடியே 38 லட்சத்து 61 ஆயிரத்து 600 செலவில் 19 ஆயிரத்து 352 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் 2015–16–ம் ஆண்டில் கடந்த நவம்பர் மாதம் வரை 671 பேருக்கு 86 லட்சத்து 55 ஆயிரத்து 900 ரூபாய் செலவில் 2 ஆயிரத்து 684 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆடுகளின் நலனை பாதுகாக்கும் வகையில், கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் ஈரோடு மாவட்டத்தில் இலவச குடற்புழு நீக்க முகாம் நேற்று நடந்தது.

<u>19 ஆயிரம் ஆடுகளுக்கு...</u>

இதுகுறித்து ஈரோடு மாவட்ட மண்டல இணை இயக்குனர் டாக்டர் ரவிச்சந்திரன் கூறியதாவது:–

ஈரோடு மாவட்டத்தில் நேற்று 61 ஊராட்சிகளில் 75 இடங்களில் இலவச குடற்புழு நீக்க முகாம் நடந்தது. இதில் 19 ஆயிரம் ஆடுகளுக்கு குடற்புழு நீக்கப்பட்டன. குடற்புழு நீக்கம் செய்வதன் மூலம் ஆடுகளின் உடல் எடை அதிகரிக்கும்.

மேலும் நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் இனவிருத்தி திறன் அதிகரித்து ஆடுகளின் மூலம் கிடைக்கும் வருவாய் உயரும். நாளை (இன்று) 20 ஊராட்சிகளில் இலவச குடற்புழு நீக்க முகாம் நடக்க உள்ளது. எனவே விலையில்லா ஆடுகள் வைத்திருப்போர் முகாமுக்கு தங்களது ஆடுகளை கொண்டு வந்து இலவசமாக குடற்புழு நீக்கம் செய்து கொள்ளலாம். இவ்வாறு ஈரோடு மாவட்ட மண்டல இணை இயக்குனர் டாக்டர் ரவிச்சந்திரன்கூறினார்.

## தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலம் ரூ.60 லட்சம் கடனுதவி

கடுக்கரை, அழகியபாண்டியபுரம், அருமநல்லூர் ஆகிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலம் கடனுதவி வழங்கும் விழா, கடுக்கரை தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் நடந்தது. இதற்கு

கடுக்கரை கூட்டுறவு சங்க தலைவர் அய்யப்பன் தலைமை தாங்கினார். ஒன்றிய கவுன்சிலர் ரெங்க கிருஷ்ணன் வரவேற்று பேசினார். ஊராட்சி மன்ற தலைவர்கள் வள்ளிநாயகம், பொன்ராஜ், முன்னாள் ஊராட்சி தலைவர் மகாராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் முன்னாள் அமைச்சர் தளவாய் சுந்தரம் கலந்து கொண்டு, ரூ.60 லட்சம் கடனுதவிகளைவழங்கினார்.

நிகழ்ச்சியில் ஆரல்வாய்மொழி கூட்டுறவு சங்க தலைவர் கிருஷ்ணகுமார், பூதப்பாண்டி வட்டார வேளாண்மை ஆத்மா குழு தலைவர் கே.சி.யு.மணி, அழகியபாண்டியபுரம், அருமநல்லூர் தொடக்க வேளாண்மை சங்க தலைவர்கள் கென்னடி, வேலாயுதம்பிள்ளை, இலக்கிய அணிச்செயலாளர் இ.என்.சங்கர், நிர்வாகிகள் தென்கரை மகாராஜன், முத்துராஜ், அருள், லோகிதாஸ், ஜோஸ் நேசமணி மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க செயலாளர்கள் பகவதி பெருமாள், சிறில் பீட்டர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**விலையில்லா ஆடுகளுக்கு குடற்புழு நீக்க மருந்து வழங்கும் சிறப்பு முகாம்**

கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி வட்டம், தென்னிலை தெற்கு ஊராட்சியில் கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் விலையில்லா வெள்ளாடுகள் மற்றும் செம்மறியாடுகளுக்கு குடற்புழு நீக்க மருந்து வழங்கும் சிறப்பு முகாம் நடைபெற்றது. முகாமிற்கு கலெக்டர் ஜெயந்தி தலைமை தாங்கி முகாமை தொடங்கி வைத்து பேசினார். இந்த முகாமில் மொத்தம் 532 விலையில்லா ஆடுகளுக்கு குடல்புழு நீக்குவதற்கான மருந்து வழங்கப்பட்டன. இந்த முகாமில் அரவக்குறிச்சி தாசில்தார் உதயகுமார், மண்டல இணை இயக்குனர் பழனிவேல், உதவி இயக்குனர்கள் ராஜேந்திரன், முருகேசன், தென்னிலை கிழக்கு ஊராட்சி

மன்ற தலைவர் சண்முகம், தென்னிலை தெற்கு ஊராட்சி மன்ற தலைவர் துரைசாமி, தென்னிலை கூட்டுறவு சங்க தலைவர் சண்முகம், கால்நடை மருத்துவர்கள் தென்னிலை கலைவாணி, சின்னதாராபுரம் மோகன்ராஜ், தென்னிலை பாலு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**காவல்கிணறு மார்க்கெட்டில் ஒரு மூடை கத்தரிக்காய் ரூ.8 ஆயிரத்துக்கு விற்பனை ஒரே நாளில் மிளகாய் கிலோவுக்கு ரூ.80 உயர்வு**



பணகுடி,

காவல்கிணறு காய்கறி மார்க்கெட்டில் ஒரு மூடை கத்தரிக்காய் ரூ.8 ஆயிரத்துக்கு விற்பனை ஆனது. ஒரே நாளில் மிளகாய் கிலோவுக்கு ரூ.80 உயர்ந்தது.

<u>கத்தரிக்காய்</u>

காவல்கிணறு மார்க்கெட்டில் காமராஜர் காய்கனி மார்க்கெட்டு உள்ளது. இந்த பகுதியில் விளையும் காய்கனிகளை, வியாபாரிகள் இங்கு கொண்டு வந்து விற்பனை செய்வது வழக்கம்.

நேற்று முன்தினம் ஒரு மூடை கத்தரிக்காய் ரூ.5 ஆயிரத்துக்கு விற்பனை ஆனது. நேற்று ஒரே நாளில் மூடைக்கு ரூ.3 ஆயிரம் உயர்ந்து ரூ.8 ஆயிரமாக விற்பனை செய்யப்பட்டது. ஒரு கிலோ கத்தரிக்காய் ரூ.160–க்கு விற்பனை ஆனது.

<u>மிளகாய்</u>

இதேபோல் நேற்று முன்தினம் ஒரு கிலோ மிளகாய் ரூ.140 க்கு விற்பனை ஆனது. கிலோவுக்கு ரூ.80 உயர்ந்து நேற்று கிலோ ரூ.220 க்கு விற்பனை ஆனது. இதேபோல் மற்ற காய்கறிகளின் விலையும் சிறிது அளவில் மாற்றம்ஏற்பட்டது.

## குடிமங்கலம் பகுதிகளில் மக்காச்சோளம் சாகுபடி பரப்பளவு அதிகரிப்பு

குடிமங்கலம்,

உடுமலை, குடிமங்கலம் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் விவசாயம் பிரதான தொழிலாகும். இங்கு ஏராளமான விவசாயிகள் மக்காச்சோளம் சாகுபடியில் ஈடுபட்டு வருகிறார்கள். மக்காச்சோளம் 110 நாட்களில் அறுவடைக்கு தயாராகி விடும் என்பதால் விவசாயிகள் மக்காச்சோளம் சாகுபடியில் ஆர்வம் காட்டி வருகிறார்கள். இந்த ஆண்டும் பருவமழை போதுமான அளவுக்கு பெய்து இருப்பதாலும், அணைகள் நிரம்பி விட்டதாலும் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு சாகுபடி பரப்பளவு அதிகரித்து உள்ளது.

மக்காச்சோளம் சாகுபடி குறித்து விவசாயி ஒருவர் கூறியதாது:–

மக்காச்சோளம் சாகுபடிக்கு குறைந்த அளவு தண்ணீர் போதுமானது. இப்பகுதியில் மானாவாரியில் அதிக பரப்பளவில் மக்காச்சோளம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஒரு ஏக்கரில் மக்காசோளம் சாகுபடி செய்ய

8 கிலோ விதை தேவைப்படுகிறது. மேலும் உழவு, களை எடுத்தல் என ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் செலவு ஆகிறது. அறுவடையின் போது ஒரு ஏக்கருக்கு 3 ஆயிரம் கிலோவரை மகசூல் கிடைக்கிறது.

தற்போது 100 கிலோ மக்காச்சோள மூட்டை ரூ.1600–க்கு விற்பனையாகிறது. கர்நாடக மாநிலத்தில் இருந்து மக்காச்சோளம் வரத்து உள்ளதால் மக்காச்சோளம் விலை சீரான நிலையில் உள்ளது. கடந்த ஆண்டை காட்டிலும், இந்த ஆண்டு மக்காச்சோளம் மகசூல் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. இவ்வாறுஅவர் கூறினார்.